**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்தின் கீழ் செயல்படும் அரசு மறுவாழ்வு இல்ல அலுவலகங்களில் IFHRMS முறையில் கருவூலத்திற்கு இணையதள ஊதிய பட்டியல்கள் அனுப்புதல் – கணினி மற்றும் இடுபொருட்களை எல்காட் மூலம் கொள்முதல் செய்தல் – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 3**

**நாள்: 21.01.2019**
**விளம்பி – தை, 7**
**திருவள்ளுவர் ஆண்டு, 2050**

**படிக்கப்பட்டது:**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 5095/ம.இ.நிர்/2018, நாள் 11.09.2018.

----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் 01.10.2018 அக்டோபர் முதல் அனைத்து அலுவலகங்களிலும் ஊதியப்பட்டியல்கள் மற்றும் இதர பட்டியல்களும் IFHRMS இணையதள முறையில் பட்டியல்கள் தயார் செய்து கருவூலக் கணக்குத் துறைக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும், ஒவ்வொரு அலுவலகத்திலும் கணினி மற்றும் கணினி சம்பந்தப்பட்ட இடுபொருட்களை தயார் நிலையில் வைக்குமாறு கருவூல கணக்குத் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும், அதனைத் தொடர்ந்து ஆணையரகத்திற்குத் தேவையான கணினி மற்றும் உபகரணங்களுக்கு எல்காட் நிறுவனம் மூலம் விலைப் புள்ளி பெறப்பட்டுள்ளது எனவும், அரசு மறுவாழ்வு இல்லங்களின் கீழ் உள்ள 11 இல்லங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்தில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லங்கள் பிரிவு அலுவலகத்தையும் சேர்த்து 12 அலுவலகங்களுக்கும் கீழ்க்கண்ட விவரப்படி ஒவ்வொரு அலுவலகத்திற்கும் கணினி பொருட்கள் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்:–

| | | |
|---|---|---|
| (1) கணினி | – | 2 |
| (2) பிரிண்டர் | – | 1 |
| (3) ஸ்கேனர் மற்றும் காப்பியர் | – | 1 |
| (4) UPS | - | 2 |

2. மேலும் அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்களிலும் கணினி சார்ந்த சாதனங்கள் இல்லாத நிலையில் கருவூல கணக்குத் துறைக்கு இணையதளம் மூலம் கட்டாயமாக பட்டியல்கள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு விரைந்து எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்திற்கு தேவையான பின்வரும் கணினி பொருட்களை கொள்முதல் செய்திட உரிய

(த.பி.பா.)

அனுமதியும் ரூ.16,58,000/– (ரூபாய் பதினாறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடும் வழங்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வ. எண் | பொருட்களின் விவரம் | விலைப்புள்ளி மதிப்பீட்டின்படி ஒன்றின் விலை | மறுவாழ்வு இல்லங்களின் தேவை எண்ணிக்கை | விலைப்புள்ளி பட்டியலின் நிர்ணயத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | Desktop Computer | ரூ. 31,400/– | 24 | ரூ. 7,53,600/– |
| 2. | Windows | ரூ. 9,400/– | 24 | ரூ. 2,25,600/– |
| 3. | Antivirus | ரூ. 710/– | 24 | ரூ. 17,040/– |
| 4. | Laser Printer | ரூ. 9,925.65 | 12 | ரூ. 1,19,108/– |
| 5. | Scanner | ரூ. 5,525,75 | 12 | ரூ. 66,309/– |
| 6. | UPS | ரூ. 7,762.50 | 24 | ரூ. 1,86,300/– |
| மொத்தம் | | | | ரூ. 13,67,957/– |

(a) Service Charge @ 2.50% of the order value = Rs. 34,199/-

(b) GST @ 18% (CGST 9% + SGST 9%) on the Service charges = Rs. 6,156/-

(c) Advertisement Charges on the prorate basis (Approx) = Rs. 3,419/-

(d) GST @ 18% on the item No.1, 2, 3, 4, 5, 6 = Rs.2,46,232/-

-----------------

**Grand Total = Rs.16,57,963/-**

-----------------

**(or) Rs.16,58,000/-**

**3.** மேலே உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அனைத்து அரசு மறுவாழ்வு இல்ல அலுவலகங்களிலும் IFHRMS முறையில் கருவூலத்திற்கு இணையதள ஊதியப் பட்டியல்கள் அனுப்புவதற்குத் தேவையான கணினி மற்றும் இடுபொருட்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ஐ தவறாது பின்பற்றி, நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி எல்காட் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்திட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையருக்கு அனுமதியும், இதற்கென தேவைப்படும் செலவினத் தொகை ரூ.16,58,000/– (ரூபாய் பதினாறு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு அளித்தும் ஆணையிடுகிறது.

**4.** மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235-Social Security and Welfare 02 – Social Welfare-104 Welfare of Aged, infirm and destitute – State Expenditure – AI – Leprosy Beggars Rehabilitation Homes–76 Computer and Accessories – 01 Purchase".

[D.P. Code 2235 02 104 AI 7615]

5. மேலே பத்தி–3ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.16,58,000/– 2018–19ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி–3இல் அனுமதிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் இத்தொகையை சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித் (ச.ந./வ.செ.பொ–1) துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண் 65660/நிதி(சந)/2018, நாள் 17.01.2019–ன் படி வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 2507 (இரண்டாயிரத்து ஐநூற்று ஏழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், (A&E) சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், கருவூல கணக்குத் துறை,
கால்நடை மருத்துவமனை வளாகம், 571, அண்ணா சாலை,
நந்தனம், சென்னை–600 035.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதுநிலை தனிச்செயலர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், சென்னை–9.
நிதி (ச.ந./வ.செ.பொது–I / வ.செ.பொ–II)த் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்